இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 09-03-2024

# போதையின் தலைநகர் குஜராத்

போதைப் பொருள் தடுப்பு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவர் கட்சியில் இருந்தார். இதனை அறிந்ததும் அவர் நீக்கப்பட்டு விட்டார். தவறான நபர் என்று புகார் வந்ததும் அவரைக் கட்சியை விட்டு நீக்குவதற்கு தி.மு.க. தயங்கவில்லை. உடனே, தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாகி விட்டதாக பொய்ப் புகார்களைக் கிளப்புகிறார்கள். இதையே பிரதமர் மோடியும் சொல்லி இருக்கிறார்.

"ஆட்சியில் இருக்கும் கட்சியின் ஆதரவில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இது என் மனதை வருத்தமடையச் செய்துள்ளது. போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மீது பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும் என்பதே மோடியின் உத்தரவாதம்" என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

**நாட்டிலேயே அதிகமான போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்தான் என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இது இருக்கிறது.** இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.

★ **ராஜஸ்தான்**

★ **பஞ்சாப்**

★ **மத்தியப்பிரதேசம்**

★ **ஜார்கண்ட்**

★ **மணிப்பூர்**

★ **குஜராத்**

★ **அரியானா**

★ **பீகார்**

★ **மேற்கு வங்கம்**

★ **உத்திரப்பிரதேசம்** - ஆகிய பத்து மாநிலங்களில்தான் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும், ஆளும் கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். பிரதமர் மோடியின் உத்தரவாதம் ஏன் அங்கு செயல்படுத்தப்படவில்லை?

அந்த மாநிலத்தில் போய் போதை மருந்து ஒழிப்பு பற்றி பேசுகிறாரா பிரதமர்?

**போதை மருந்துக்கு தலைநகரே குஜராத் மாநிலம்தான்.**

**இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக இருப்பது குஜராத் மாநிலம்தான். கடந்த 1ஆம் தேதியன்று குஜராத்தில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிறிய வகை கப்பலில் கொண்டு வந்துள்ளார்கள். 3,300 கிலோ எடை கொண்ட போதைப் பொருட்கள் இவை. ஐந்து பேரைக் கைது செய்தது காவல் துறை. இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து போதைப் பொருள் விற்கும் அளவுக்கு 'பாதுகாப்பான' மாநிலமாக குஜராத் இருக்கிறது.**

கடந்த செப்டம்பர் மாதம் குஜராத் மாநிலம், ராஜ்கோட் நகருக்கு அருகில் உள்ள மிதி ரோகர் என்ற கிராமத்தில் ஒரு கிலோ எடையில் 80 பாக்கெட்டுகள் கிடந்தன. பொதுமக்கள் பார்த்து போலீஸுக்கு சொன்னார்கள். 2022, 23 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்து ரூ.4 ஆயிரம் கோடிக்கும் அதிகமான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்திருப்பதாக அந்த மாநில அரசே சொல்லி இருக்கிறது. பறிமுதல் செய்யப்பட்டதே இவ்வளவு என்றால் - புழக்கத்தில் விடப்பட்டது எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இருக்கும்?

2017 - 21 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் குஜராத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது. குஜராத் உள்துறை அமைச்சர் ஹார்ஸ் சங்வி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 3 போதை மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டது. போதை மருந்துகள் அதிகம் வந்து இறங்குவது முந்த்ரா துறைமுகத்தில் என்று செய்திகள் வருகின்றன.

குஜராத் மாநில கடற்பகுதியில், ஒரு கப்பலில் இருந்து 1,500 கிலோ ஹெராயினை இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஒரு வணிக கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த ஹெராயினின் மதிப்பு கிட்டத்தட்ட 550 மில்லியன் டாலர் இருக்கும் என கடலோரக் காவல்படை அறிக்கையே வெளியிட்டது. **"இவ்வளவு போதைப் பொருள்கள் ஒரே நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை"** என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் டி.கே.சர்மா சொன்னார்.

ஹெராயினின் முக்கிய மூலப்பொருளாக ஓபியம் உள்ளது. **உலகின் மிகப்பெரிய ஓபியம் உற்பத்தியாளர்களால் ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் குஜராத் வழியாக வருகிறது. ஆப்கானிஸ்தானில் தயாராகும் ஹெராயின்கள், இந்தியப் பெருங்கடல் வழியாக கிழக்கு மற்றும் தெற்கு ஆப்ரிக்காவுக்குக் கடத்தப்படுவதாக ஐ.நா.வின் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் கூறுகிறது.** வட மாநிலமான பஞ்சாப், ஹெராயினால் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள முந்திரா துறைமுகத்துக்கு ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் வந்து இறங்கியது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகப்பெரிய போதைப் புதையலை குஜராத் காவல்துறையினர் பிடித்தார்கள். அவர்கள் நடத்திய சோதனையில் குஜராத் கடற்கரைக்கு அருகே கடத்தல் படகு பிடிபட்டது. அதில், சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா, மெத்தாம்பிடமைன் மற்றும் ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் 760 கிலோ கண்டுபிடிக்கப்பட்டன. இதன் சர்வதேச மார்க்கெட் விலை ரூ.2,000 கோடி. அண்டை நாட்டில் இருந்து செயல்படும் போதை கடத்தல் கும்பல், இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு கடல் மார்க்கமாக போதைப் பொருட்களை சப்ளை செய்து வருகின்றன என்று அறியப்பட்டது.

சமீப காலமாக குஜராத் துறைமுகங்களைப் பயன்படுத்தி போதைப் பொருள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்; **"குஜராத்தில் பல கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் அங்கு தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன, கண்மூடித்தனமாக போதைப்பொருள் வியாபாரம் செய்யும் இவர்கள் யார்? இந்த மாபியாக்களுக்கு எந்த ஆளும் சக்திகள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள்?"** என அப்போதே கேள்வி எழுப்பினார். ஆனால் பதில் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை!

**இப்படிப்பட்ட செய்திகளை மறந்து விட்டுத்தான் பிரதமர் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். குஜராத் முந்திரா துறைமுகத் தகவல்கள் ஏன் அவரை வருத்தமடைய வைக்கவில்லை?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.3.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி விஜிலா சத்தியானந்த், துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள போதகர் ஆர். தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஐ. ரோஸ்லின் ஜீவா, ஜான் பிரகாஷ் எபினேசன், எம். சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி. மோகன்தாஸ், போதகர் டி. சோபித்தராஜ், சி. ஜெபநேசர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.

## இலக்கியத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றி வரும்

# பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு ஔவையார் விருது அறிவிப்பு!

சென்னை, மார்ச் 9-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் திருமிகு பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்காக கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கான சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிருவாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 2012 ஆம் ஆண்டு முதல்

தமிழ்நாடு அரசால் "ஔவையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான



காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

அவ்வகையில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் 2024-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும், முன்னணி எழுத்தாளரான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமிகு. பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை தனது வாழ்வனுபவங்களின் மூலம் அதன் தகிக்கும் அனலோடு தமிழிலக்கிய படைப்புகளாகவும், சாதி மற்றும் பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையையும் அநீதிகளையும் எடுத்துக்காட்டும் தொகுப்புகளாகவும் எழுதியுள்ளார். இவரது நூல்களான கருக்கு, சங்கதி, வன்மம், மனுசி போன்ற நாவல்களும், கிசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் போன்ற சிறுகதை தொகுப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவர் எழுதிய "கருக்கு" என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000-ஆம் ஆண்டின் 'கிராஸ் வேர்ட்புக்' விருதை பெற்றுள்ளது.

## போதைப் பொருட்கள் எங்கிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்றன?

# பிரதமரே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆதாரப்பூர்வமான பதிலடி!

சென்னை, மார்ச் 9-

தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள்கள் கடத்தல் அதிகம் என்று சென்னையில் பிரதமர் மோடி பேசியுள்ளார். தமிழ்நாட்டிற்கு இவை எங்கிருந்து வருகின்றன? மாநிலங்களவையில் உள்துறை அமைச்சகம் அளித்த போதைப் பொருள் அதிகமாகக் கடத்தும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இல்லையே! போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் வருகின்றது. உண்மை இவ்வாறு இருக்க, பிரதமர் உண்மைக்கு மாறாகப் பேசலாமா? பிரதமர் மோடி அவர்களே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

4-3-2024 அன்று சென்னையில் தரம் தாழ்ந்து பேசிய பிரதமர் மோடி,

"தி.மு.க. அரசின் ஆதரவால்தான் தமிழகத்தில் போதைப் பொருள்கள் வியாபாரம் செழித்து வருகிறது.

என் மனதை அரிக்கும் கவலையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழகத்தைச் சேர்ந்த பெற்றோர் மனதிலும் ஆழ்ந்த கவலை உள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் ஆதரவில், தமிழகத்தில் போதைப் பொருள்கள் தடையின்றி, அனைத்து இடங்களிலும் புழங்கி வருகிறது என்பது தான் என் மனதை உருக்கும் கவலை.... இது அபாயத்தின் அறிகுறி, தமிழகத்தின் எதிரிகள்மீதான நடவடிக்கை, மேலும்விரைவுபடுத்தப்படும்.

இது மோடி அளிக்கும் "கியாரண்டீ"

**போதைப் பொருள்கள் எங்கிருந்து வந்தன?**

நன்றி! பிரதமர் மோடி அவர்களே, இந்தக் கொடுமையான போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிற்கு எங்கிருந்து வந்தன - வருகின்றன என்பதை அறிந்துகொள்ள, அனைத்து மாநிலங்களையும் ஆளும் பிரதமர், உள்துறை அமைச்சர் போன்ற ஒன்றியப் பொறுப்பிலிருக்கும் உங்களைப் போன்ற "மனதை உருக்கும் கவலை" - எங்களுக்கும், தமிழ்நாட்டவருக்கும் இருப்பதால் பதில் கூறுங்கள்.

விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்களில்



யாருடைய அதிகாரங்கள் உள்ளன என்றாலும், போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா? தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றனவா? வெளிநாட்டு, பன்னாட்டு மாஃபியாக்கள் மூலம்தானே கோடி கோடியாக உள்ளே நுழைகின்றன!

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் தங்களது "டபுள் எஞ்ஜின்" நிர்வாகம் நடத்தும் குஜராத்திலிருந்துதான் இந்திய நாட்டின் மாநிலங்களுக்குள் நுழைந்து மக்களை சீரழிக்கின்றன என்ற தகவல்கள் பொய்யா, மெய்யா?

**உள்துறை அமைச்சகம் ஒப்புக்கொண்ட உண்மைகள்!**

1.2023 டிசம்பர் 13 அன்று மாநிலங்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், உத்தரப்பிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்கள் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதில் முதன்மை இடத்தில் உள்ளன. இந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் போதைப் பொருள் புழக்கம் குறைவானதே! என்றாலும், அதை ஒழிக்கத் தமிழ்நாடு தி.மு.க. அரசு இடையறாத முயற்சியை மேற்கொள்ளத் தவறியது உண்டா?

பெரிதும் போதைப் பொருள்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுவது குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் வழியாகத்தான் என்று ஊடகங்களில் வந்த செய்தித் தொகுப்புகள் - தரவுகள் அருகில் தரப்பட்டுள்ளன. குஜராத் முந்த்ரா துறைமுகம் யாருடையது?

இந்தியாவின் "பிரபல ஏழையான" அதானியின் துறைமுகம்!

அந்த அதானி யார்? நம்முடைய பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமானவர்; அவருடன் சேர்ந்து அவரது விமானத்திலேயே செல்லும் அரிய வாய்ப்புப் பெற்றவர்!

'நடவடிக்கை' எடுக்கவில்லையா? நாங்கள், எடுத்தது செய்திதானே என்று பதில் கூறலாம்!

அதே பதில் உங்களுக்கு மட்டும்தானா?

**அரசு ஆக்கரீதியாக செயல்படவில்லையா?**

தமிழ்நாட்டு தி.மு.க. அரசும், முதலமைச்சரும், காவல்துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லையே! இது பற்றி தமிழ்நாடு (தி.மு.க.) அரசின் சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் தெளிவான விளக்கம் தந்துள்ளாரே!

"1. போதைப் பொருள்களைத் தடுப்பதற்காக 10.8.2023 அன்று மாநில அளவிலான காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, இத்தகைய போதைப் பொருள்கள் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்பதற்கான நடவடிக்கையை முதலமைச்சர் எடுத்தார்.

2. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர்மீதும், மற்ற அதிகாரிகள் மீதும் வழக்குத் தொடுவதற்கான கோப்பு நீண்ட நாள் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்தது - பிறகு, அவர் (சில காலம் முன்புதான்) வழக்குத் தொடர அனுமதி அளித்துள்ளார்! அதுமட்டுமா?

**கஞ்சா கடத்தியவர்களை வரவேற்பது பா.ஜ.க.தானே!**

தி.மு.க.வில் இருந்த ஒருவர் சம்பந்தப்பட்டதாக விசாரணை நடப்பதாலேயே அக்கட்சிமீது பழி சுமத்தி விடுவது நியாயமா?

அவரை உடனே கட்சியிலிருந்து விலக்கி, நடவடிக்கை எடுக்க தி.மு.க. தலைமை தயங்கவில்லையே!

தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப் பொருள் விற்பனைத் தொழில்களில் ஈடுபட்டவர்களை சிவப்புக் கம்பளம் விரித்து, பா.ஜ.க. தனது கட்சியில் சேர்த்துக்கொண்டது.

இப்படி தி.மு.க.மீது பழி போட்டு, தேர்தல் வாக்குகளை வாங்க குறுக்குவழி தேடலாமா?

தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி உடைந்தது மட்டுமல்லாமல், புதிதாக எவரும் அக்கூட்டணிக்கு வரவும் தயாராக இல்லை; பிரதமர் மோடி நான்கு முறை தமிழ்நாட்டிற்கு வந்தும் இந்நிலையே என்கிற கோபத்தாலும், தேர்தல் தோல்வி என்ற பயத்தாலும் இப்படி ஜன்னி கண்டவர் போல் பிதற்றுவது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகா? யோசிக்கவேண்டும்!

**உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!**

தனது குஜராத் நடப்புகளை மறந்துவிட்டு, இப்படி தமிழ் நாட்டைப் பார்க்கிற பிரதமர் மோடியிடம், "மருத்துவரே உங்கள் நோயைக் முதலில் குணப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுதான் தமிழ்நாட்டவர் கூறுவர்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, டி. என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் 2015ஆம் ஆண்டிற்கான சிறந்த படங்கள், சிறந்த நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகள் மற்றும் தங்க பதக்கங்களை விருதாளர்களுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றஉறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.